## "இன்று ஒரு பனை நடுவோம் – நாளைய தலைமுறைக்கு வளம் தருவோம்"

***ஒரு விதை... ஒரு மரம்... ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரம்... ஒரு தலைமுறையின் எதிர்காலம்!***

## தேசிய பனை நடுகை மாதம்- ஒக்டோபர் 2026



***இன்று நாம் ஒரு பனை விதையை மண்ணில் விதைக்கும் போது, ஒரு மரத்தை மட்டும் நடுவதில்லை. நாம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கிறோம் நிலத்தையும் நீரையும் காக்கிறோம் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்கொள்கிறோம் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் எதிர்கால வாழ்வாதாரத்திற்கான அடித்தளத்தை அமைக்கிறோம்.***

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இயற்கை அடையாளமாகத் திகழும் பனைமரம் (*Borassus flabellifer*), தலைமுறைகளாக மக்களின் உணவு, தொழில், பொருளாதாரம் மற்றும் கலாசாரத்துடன் இணைந்திருக்கும் ஒரு "வாழ்வளிக்கும் மரம்" ஆகும். இலங்கையில் சுமார் 11 மில்லியன் பனைமரங்கள் காணப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. இந்த வளம் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படாத மிகப்பெரிய இயற்கைச் செல்வமாக உள்ளது.

**பனை – இயற்கையின் பாதுகாப்புக் கவசம்.**

பனைமரம் வறண்ட நிலங்களிலும், குறைந்த வளமுள்ள மண்ணிலும், கடுமையான வெப்பத்திலும் வளரக்கூடிய வலிமையான மரமாகும். பல பயிர்களைப் போல தொடர்ச்சியான நீர்ப்பாசனம், அதிக உரம் அல்லது பூச்சிக்கொல்லிகள் இன்றி வளரக்கூடிய தன்மை பனைக்கு உள்ளது. அதன் வலுவான வேர் அமைப்பு மண் அரிப்பைக் கட்டுப்படுத்தவும், நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாக்கவும் உதவுகிறது. மேலும், பனைமரங்கள் இயற்கையான காற்றுத்தடுப்புச் சுவராக செயல்பட்டு, பலத்த காற்றின் வேகத்தைக் குறைத்து நிலம் மற்றும் பயிர்களைப் பாதுகாக்க உதவுகின்றன.





பனைமரங்கள் தனித்தனியாக நிற்கும் மரங்கள் மட்டுமல்ல. அவற்றைச் சுற்றியுள்ள தாவரங்கள் மற்றும் உயிரினங்களுக்கு வாழ்விடத்தையும் வழங்குகின்றன. எனவே, பனை வளர்ப்பு என்பது மரநடுகை மட்டுமல்ல் உயிரினப் பல்வகைமையைப் பாதுகாக்கும் ஒரு சுற்றுச்சூழல் நடவடிக்கையும் ஆகும்.

காலநிலை மாற்றம் உலகின் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக மாறியுள்ள நிலையில், பனைமரங்களின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது. பனைமரங்கள் வளரும்போது வளிமண்டலத்திலுள்ள கார்பன் டை ஒக்சைடை உறிஞ்சி, அதன் உயிர்த்திணிவு மற்றும் மண்ணில் கார்பனைச் சேமிக்கின்றன.யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஆய்வொன்று, பனை

நிலப்பயன்பாட்டில் மர உயிர்த்திணிவு மற்றும் மண்ணில் கணிசமான அளவு கார்பன் சேமிக்கப்பட்டிருப்பதை பதிவு செய்துள்ளது. இந்த ஆய்வு பனை நிலப்பயன்பாடு நீண்டகால கார்பன் சேமிப்பிற்கும் காலநிலை மாற்றத் தணிப்பிற்கும் பங்களிக்கக்கூடியது எனக் குறிப்பிடுகிறது.

எனவே,**"ஒரு பனை விதை எதிர்காலத்தின் ஒரு பசுமை முதலீடு"** என்று நாம் கருத வேண்டும்.

**நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பனை:**



வறண்ட பிரதேசங்களில் நீரின் முக்கியத்துவத்தை நாம் நன்கு அறிவோம். மழைநீர் மண்ணில் ஊடுருவி நிலத்தடி நீர் வளத்தைப் பேணுவதிலும், மண்ணை நிலைப்படுத்துவதிலும் பனை மரங்களின் வேர் அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.குறிப்பாக வறட்சி மற்றும் நீர்ப்பற்றாக்குறை அதிகம் காணப்படும் பகுதிகளில், பனைமரங்களைப் பாதுகாப்பதும் புதிய பனைத் தோப்புகளை உருவாக்குவதும் நீண்டகால சுற்றுச்சூழல் பாதுகாப்பின் ஒரு பகுதியாக பார்க்கப்பட வேண்டும்.

**இயற்கையான காற்றுத்தடுப்புச் சுவர்**

கடலோர மற்றும் திறந்த வெளிப் பகுதிகளில் பலத்த காற்று, மணல் நகர்வு மற்றும் மண் அரிப்பு போன்றவை நிலத்தையும் விவசாயத்தையும் பாதிக்கக்கூடும். உயரமாகவும் வலிமையாகவும் வளரும் பனைமரங்கள் காற்றின் தாக்கத்தைக் குறைக்கும் இயற்கையான தடுப்பாகச் செயல்படுகின்றன. எனவே, கடலோரப் பகுதிகள், வறண்ட நிலங்கள், விவசாய நிலங்களின் எல்லைகள், திறந்த வெளிகள், கிராமப்புறப் பகுதிகள் மற்றும் பொருத்தமான அரச மற்றும் தனியார் நிலங்கள் போன்ற இடங்களில் திட்டமிட்ட முறையில் பனை நடுகையை மேற்கொள்ளலாம்.



பனை நடுகை செய்யும்போது நிலத்தின் தன்மை, நீர்நிலைகள், எதிர்கால கட்டுமானத் தேவைகள் மற்றும் பராமரிப்பு வசதிகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு சரியான இடங்களைத் தெரிவு செய்வது அவசியமாகும்.

**பனை –ஒரு பொருளாதார வளம்**



பனைமரத்தின் ஒவ்வொரு பகுதியும் மனித வாழ்வில் பயன்படக்கூடியது. பதநீர் மற்றும் அதன் பெறுபேறுகள், பனங்கட்டி, பனங்கருப்பட்டி, பனாட்டு, பனம்பழம், ஒடியல் மற்றும் ஒடியல் மாவு, நார், இலைகள், கைவினைப் பொருட்கள், தளபாடங்கள் மற்றும் மரப்பொருட்கள் போன்ற பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் பனையிலிருந்து உருவாக்கப்படுகின்றன. இதன் மூலம் பனம்தோட்ட உரிமையாளர்கள், சீவல் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், பெண் தொழில் முனைவோர், உணவு உற்பத்தியாளர்கள், சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர், வியாபாரிகள் மற்றும்

ஏற்றுமதியாளர்கள் என பல்வேறு தரப்பினருக்கு வாழ்வாதார வாய்ப்புகள் உருவாகின்றன. எனவே பனை வளத்தை நிலையான முறையில் பயன்படுத்துவதன் மூலம் கிராமப்புற வேலைவாய்ப்பு, குடும்ப வருமானம், சிறுதொழில் வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருமானம் ஆகியவற்றை மேலும் அதிகரிக்க முடியும்.

**வெட்டுவது எளிது ஒரு பனை வளர்ப்பது ஒரு தலைமுறையின் பொறுப்பு**

ஒரு வளர்ந்த பனைமரத்தை வெட்டுவதற்கு சில மணிநேரங்களே போதுமானதாக இருக்கலாம். ஆனால் அதே அளவிலான ஒரு பனைமரத்தை உருவாக்க பல ஆண்டுகள் தேவைப்படுகிறது. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், கட்டுமானங்கள், வீடமைப்பு, வீதி விரிவாக்கம், மின்சாரத் திட்டங்கள், மாற்றுப் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய நடவடிக்கைகளினால் பனை வளம் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவுகள் குறிப்பிடுகின்றன. இதனால் பனைத் தோப்புகளை மீளுருவாக்கம் செய்வது தொழில் துறையின் எதிர்காலத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் அவசியமாகியுள்ளது.

சட்டவிரோதமான மற்றும் கண்மூடித்தனமான பனை வெட்டுதல் என்பது ஒரு மரத்தின் அழிவாக மட்டும் பார்க்கப்படக்கூடாது. அது, எதிர்கால மூலப்பொருள் வளத்தின் இழப்பு ,கிராமப்புற வாழ்வாதாரத்தின் பாதிப்பு ,உயிரினப் பல்வகைமையின் குறைவு, மண் மற்றும் நீர் வளத்தின் பாதிப்பு , கார்பன் சேமிப்பு திறனின் இழப்பு எதிர்கால தலைமுறைகளுக்கான பொருளாதார வாய்ப்பின் குறைவு என பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

எனவே, தேவையற்ற பனை வெட்டுதலைத் தவிர்ப்பதும், சட்டவிரோத வெட்டுதலைத் தடுப்பதும், வெட்டப்படும் மரங்களுக்கு மாற்றாக புதிய பனைமரங்களை நடுவதும் ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும்.

**பனை மீள்நடுகை – இன்றைய கடமை**



ஏற்கனவே அழிக்கப்பட்ட அல்லது குறைந்துவிட்ட பனைத் தோப்புகளை மீளுருவாக்குவது இன்றைய அவசரத் தேவையாகும். புதிய பனை விதைகளை நடுவது மட்டுமன்றி, இயற்கையாக வளரும் இளம் பனைகளைப் பாதுகாப்பதும், தற்போதுள்ள முதிர்ந்த பனைமரங்களைப் பாதுகாப்பதும் முக்கியமானதாகும்.

பனை அபிவிருத்தி சபை ஒவ்வொரு ஆண்டும் பனை விதை மற்றும் கன்றுகளை நடும் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் பனை நடுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரச நிறுவனங்களுடன் மட்டுமன்றி சமூக அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களும் இதில் பங்கெடுக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பனை நடுகையை மேற்கொள்ளும் போது முக்கியமாக பனம் விதைகளின் தரத்தை பற்றி கவனம் எடுக்க வேண்டும். விதைகள் தரமான தாய் தாவரத்திலிருந்து சேகரிக்கப்படும் போது அவை முளைதிறன் கூடியவையாகவும் ஆட்சியான பனைகளை உருவாக்கவும் முடியும். பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்ட பெண்பனைகளில் இருந்து பாரமான பனம் விதைகளை சேகரிப்பது சிறந்தது. குறிப்பாக 350 கிராமிற்கு மெற்பட்ட பனம் விதைகள் நடுகைக்கு சிறந்தவை ஆகும். மேலும் பனம் விதைகளை சரியான இடைவெளியில் நடுவதும் மிகவும் முக்கியமானதாகும். சாதாரணமாக காணி எல்லைகள், வீதி ஓரங்களில் நடுகை செய்யும்போது இரு நடுகுளிகளுக்கிடையில் 6 அடி இடை



வெளியும் காணிகளில் தனியே பனை நடுகை மேற்கொள்ளும் போது 10 அடி இடைவெளியையும் பேணுதல் முக்கியமானதாகும். எனினும் வேறு தாவரங்களுடன் இணைத்து ஊடு பயிராக நடும்போது 10m x 10m இடைவெளி அவசியமானதாகும். இது எதிர்காலத்தில் பனையை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து சிறந்த அறுவடையை பெறுவதற்கும் மிகவும் முக்கியமானதாகும்.

பனை வளர்க்கும் இடம் வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமே இருக்க வேண்டிய அவசியமில்லை. பொருத்தமான வறண்ட மற்றும் அரைவறண்ட பகுதிகள், கிராமப்புற நிலங்கள், அரச நிலங்கள், வீட்டுத் தோட்டங்கள், விவசாய நிலங்களின் எல்லைகள், சமூக நிலங்கள், பாடசாலை மற்றும் நிறுவன வளாகங்கள் போன்ற பொருத்தமான இடங்களில் திட்டமிட்ட முறையில் பனை நடுகையை மேற்கொள்ள முடியும். பனை வளர்ப்பை புதிய பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம் பசுமைப் பரப்பை அதிகரிக்கவும், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளவும், புதிய வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கவும் முடியும்.

பனை நடுவதன் நோக்கம் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்ல. எதிர்காலத்தில் நிலையான பனைத் தொழிலை உருவாக்குவதற்கான மூலப்பொருள் தளத்தை உருவாக்குவதும் ஆகும். பனை அடிப்படையிலான உணவுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், நார் பொருட்கள், தொழில்நுட்பப் பொருட்கள் மற்றும் புதிய மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான வாய்ப்புகள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. ஆராய்ச்சி, தொழில்நுட்பப் பரிமாற்றம், தர மேம்பாடு மற்றும் சந்தை விரிவாக்கம் ஆகியவற்றுடன் இணைந்தால், பனைத்துறை ஒரு நிலையான, புதுமையான மற்றும் ஏற்றுமதி நோக்குடைய தொழில்துறையாக வளர முடியும்.

**நமது பிள்ளைகளுக்காக ஒரு பனை நடுவோம்!**

நாம் இன்று நடும் பனை மரத்தின் முழுப் பயனை நாம் அனுபவிக்காமல் இருக்கலாம். ஆனால் அதை நமது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அனுபவிப்பார்கள். ஒரு தலைமுறை நடும் மரத்தை அடுத்த தலைமுறை அறுவடை செய்கிறது.

எனவே இந்த ஒக்டோபர் – மரநடுகை மாதத்தில், ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு பனை விதையையாவது நடுவோம். பாடசாலைகள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், விவசாயிகள், சமூக அமைப்புகள், இளைஞர்கள், பெண்கள் அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தும் பனை நடுகை இயக்கத்தில் இணைவோம்.

**"பனை நடுவோம் – ஒரு தலைமுறையின் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்"**

**திருமதி. சுமித்திரா ஜனார்த்தனன்**
**B.Sc(Agri)Hon, M.Sc(OM), LLB, Attorney at law**
**முகாமையாளர்(அபிவிருத்தி)**
**பனை அபிவிருத்திச்சபை.**

